**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C. 98/2023

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ம் நாள் செவ்வாய் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW1 examined PW1

| | | |
|---|---|---|
| Date | : | 14.10.2025 |
| Name | : | தில்லைக்கரசன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Age | : | |

Accused present.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது புத்தூரில் வசித்து வருகிறேன். பைனான்ஸ் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கூட்டத்தில் இருந்த போது என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் அதனால் போட்டேன். **புகாரில் உள்ள என்னுடைய கையெழுத்து அ.சா.ஈ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** எதற்காக கையெழுத்து போட்டேன் என்றும் அதில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

கடந்த 14.04.2023 ம் தேதி நாங்கூர் மேலத் தெருவை சேர்ந்த இலக்கியராஜ் என்பவர் எனது கடைக்கு வந்து தாலி 3.900 கிராம் வைத்து ரூபாய். 11 ஆயீரம் பணம் பெற்று சென்றார் பின்னர் 26.04.2023 ம் தேதி மாலை சுமார் 4.20 மணியளில் என் கடைக்கு வந்து நகையை திருப்பி கொள்ள வந்தார் என்றும் நான் அவரிடம் ரூபாய்.

13,370 கட்டி விட்டு நகைகை மீட்டுக் கொள்ளுமாறு கூறியதாகவும் அவர் 11 ஆயிரம் மட்டும் கட்டுவேன் மீதி தொகையை கட்ட மாட்டேன் என்று என் கண்ணத்தில் அறைந்தார் என்றும் நான் பணம் கொடுத்தால் நகையை திருப்பி தருவேன் என்று சொன்னதும் மேற்படி இலக்கியராஜ் என்னை எதிர்த்து பேசுறியா என்னிடம் வைத்துக் கொள்ளாதே என்று கூறி பக்கத்து கடையில் இருந்து கத்தரிகோலை எடுத்து உன்னை உயிரோடு விட்டால் தான் இப்படி பேசுவ உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் நோக்கில் என்னை குத்த வந்தார் நான் கீழே குனிந்து விட்டேன் நான் குனியாமல் இருந்தால் கத்தரிக்கோல் என் கழுத்தில் குத்தி உயிர்போயிருக்கும் பின் ஊர்காரர்கள் வந்ததும் அவர் அங்கிருந்து சென்று விட்டார் என்றும் மறுநாள் 27.04.2023ம் தேதி அன்று போலிசாரிடம் புகார் கொடுத்து விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.